

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) அவரது இல்லத்தில், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையை பாராட்டி, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸ் அவர்கள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், "தேவேந்திரகுல மக்கள் முன்னேற்ற பேரவை"யின் தலைவர் எஸ்.ஆர்.பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் பேரவை நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை 20.3.2024 அன்று காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 'திராவிடத் தமிழர் கட்சி'யின் தலைமை நிலையச் செயலாளர் பேரறிவாளன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் மீண்டும் போட்டியிட வாய்ப்பளித்த கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு, வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி. சேகர், திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் ஆர். மூர்த்தி, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபிநேசர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோருடன் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற வேட்பாளருமான டாக்டர். கலாநிதி வீராசாமி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் ச.முரசொலி அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.




தூத்துக்குடி தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் 'இந்தியா' கூட்டணியின் கழக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று சிறப்புரையாற்றினார்.



சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி, 112 வது வார்டில் அமைந்துள்ள புலியூர் 7,8,9, ஆகிய தெருக்களில் இந்தியா கூட்டணியின் மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களை ஆதரித்து மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தலைமையில் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் ஏற்பாட்டில் மு.க. தமிழரசு, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார், உடன் சட்டமன்ற உறுப்பினர் நா .எழிலன், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, தொகுதி மேற்பார்வையாளர் கலை கதிரவன், வட்ட செயலாளர்கள் வரதை பரி, மோகன், சிட்டிபாபு, டேவிட் இன்பராஜ், மற்றும் பகுதி கழக / வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னணியினர் பங்கேற்று சிறப்பித்தனர்.